


இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

கலைஞர் 100 1924 - 2024

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 186 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – மாசி 04 – திங்கள்கிழமை 16 பிப்ரவரி 2026 – சென்னை 28+12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 186: Thiruvalluvar Year - 2057 - Maasi 04 - Monday 16 February 2026 - Chennai 28+12 Pages ₹ 5.00


## தமிழ்ப் பண்பாட்டு அடையாளங்களைச் சிதைக்கும் பிரிவினை சக்திகளுக்கு இடம் தராமல்

# வள்ளலாரின் நெறி போற்றும் சமுதாயத்தை உருவாக்குவோம்!

## அனைத்துலக வள்ளலார் மாநாட்டைத் தொடங்கி வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, பிப்.16-**

**“தமிழ்ப் பண்பாட்டு அடையாளங்களைச் சிதைக்கும் பிரிவினை சக்திகளுக்கு இடம் தராமல் வள்ளலாரின் நெறி போற்றும் சமுதாயத்தை உருவாக்குவோம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அனைத்துலக வள்ளலார் மாநாடு - 2026-ஐ தொடங்கி வைத்து உரையாற்றும் போது கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.2.2026) சென்னையில், இந்து சமய அறநிலை யத் துறை சார்பில் நடைபெற்ற “அனைத்துலக வள்ளலார் மாநாடு 2026”யை தொடங்கி வைத்து ஆற்றிய உரை வருமாறு:-

இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் நடைபெறக்கூடிய அனைத்துலக வள்ளலார் மாநாடு தொடக்க விழாவில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

‘தருமமிகு சென்னை’ என்று வள்ளலார் போற்றிய சென்னையில், அவர் காட்டிய அறநெறிகளை, வாழ்க்கை முறையாகவே பின்பற்றி வரும் ஆன்மீக அன்பர்களான உங்களை எல்லாம் இந்த “அனைத்துலக வள்ளலார் மாநாட்டில்” சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

### திருவாரூரைச் சேர்ந்தவன் என்ற பெருமையோடு பங்கேற்பு!

வள்ளலார் பாடுவதற்காக எடுத்துக் கொண்ட திருவாரூரைச் சேர்ந்தவன் என்ற பெருமையோடு இந்த மாநாட்டில் நான் பங்கேற்க வந்திருக்கிறேன்.

இந்த மாநாட்டை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கின்ற அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு அவர்களுக்கும், அவருக்கு துணை நிற்கக்கூடிய அரசுக் கூடுதல் தலைமைச் செயலாளர் மணிவாசன் மற்றும் அதிகாரிகள், அலுவலர்கள் அத்தனை பேருக்கும் நான் இந்த நேரத்தில் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய சேகர்பாபு அவர்களை பொறுத்தவரைக்கும், கழகப் பணியாக இருந்தாலும் சரி, அரசின் சார்பிலான ஆன்மீகப் பணிகளாக இருந்தாலும் சரி, அதைச் சிறப்பாக செய்து, தான் ‘செயல்பாபு’ தான் என்று தொடர்ந்து நிரூபிக்கக்கூடியவர். இந்த மாநாட்டையும், ஆன்மீக அன்பர்கள் அனைவரையும் அழைத்து, அமைதியோடும், அழகோடும் ஏற்பாடு செய்து, நம்முடைய அன்பை பெற்றிருக்கிறார். சேகர்பாபு அவர்கள் பொறுப்பேற்றதற்கு பிறகுதான், அறநிலையத் துறை இவ்வளவு சிறப்பாக, விரைவாக செயல்பட முடியுமா? என பலரும் வியப்புடன் பார்க்க தொடங்கினார்கள்! அறநிலையத்துறையில், நம்முடைய திராவிட மாடல் அரசு செய்திருக்கக்கூடிய எண்ணற்ற சாதனைகள் சிலவற்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.

### 4,192 திருக்கோயில்களில் குடமுழுக்கு!

தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு 20 ஆண்டுகள் முதல் 100 ஆண்டுகள் வரை குடமுழுக்கு விழாக்கள் நடைபெறாத 4 ஆயிரத்து 192 கோயில்களில், திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்தப்பட்டிருக்கிறது.

ஆயிரம் ஆண்டுகள் பழமையான திருக்கோயில்களை புனரமைத்து பாதுகாத்திடும் வகையில், அரசு நிதி 425 கோடி ரூபாய் - திருக்கோயில் நிதி - உபயதாரர் நிதி - பொதுநல நிதி என்று மொத்தம் 560 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 352 திருக்கோயில்களை திருப்பணிக்கு எடுத்துக் கொண்டு இதுவரை 87 திருக்கோயில்களில் குடமுழுக்கு செய்து முடித்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, 12 ஆயிரத்து 931 திருக்கோயில்களில், 8 ஆயிரத்து 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில்


தொடர்ச்சி 3ஆம் பக்கம்





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.2.2026) சென்னையில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் நடைபெற்ற அனைத்துலக வள்ளலார் மாநாடு 2026யை தொடங்கி வைத்து, உரையாற்றினார். இம்மாநாட்டில், அமைச்சர்கள் எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, கலாநிதி வீராசாமி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே.மோகன், தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், ஆர்.டி.சேகர், ஐட்ரீம் மூர்த்தி, இந்து குழும நிறுவனத்தின் இயக்குநர் என்.ராம், கோவை குமரகுரு கல்வி நிறுவனங்கள் தலைவர் டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வானவராயர், வடலூர் தலைமை சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத் தலைவர் டாக்டர் அருள் நாகலிங்கம், பொதுச் செயலாளர் டாக்டர் கி.வெற்றிவேல், வள்ளலார் சன்மார்க்கிகள் ஆதி மகாசாது சுவாமி பத்மேந்திரா, சண்முக மூர்த்தி லெட்சுமணன், இராம பாண்டுரங்கன், டாக்டர் செல்வ மாதரசி, அறிவழகன், செல்வகுமார், வள்ளலார் அமைப்புகளின் நிருவாகிகள், இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் குழு உறுப்பினர் சுகி சிவம், நே.சிற்றரசு, ப.ரங்கநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### வியப்புமிகு சாதனைகள் பல படைத்த அமைச்சர் பி.கே.சேகர்பாபு!



**நம்முடைய சேகர்பாபு அவர்களை பொறுத்த வரைக்கும், கழகப் பணியாக இருந்தாலும் சரி, அரசின் சார்பிலான ஆன்மீகப் பணிகளாக இருந்தாலும் சரி, அதைச் சிறப்பாக செய்து, தான் ‘செயல்பாபு’ தான் என்று தொடர்ந்து நிரூபிக்கக்கூடியவர். இந்த மாநாட்டையும், ஆன்மீக அன்பர்கள் அனைவரையும் அழைத்து, அமைதியோடும், அழகோடும் ஏற்பாடு செய்து, நம்முடைய அன்பை பெற்றிருக்கிறார். சேகர்பாபு அவர்கள் பொறுப்பேற்றதற்கு பிறகுதான், அறநிலையத் துறை இவ்வளவு சிறப்பாக, விரைவாக செயல்படமுடியுமா? என பலரும் வியப்புடன் பார்க்க தொடங்கினார்கள்!**

---

## உடலுறுப்பு தானத்தில் தமிழ்நாடு தொடர்ந்து முதலிடம்!

சென்னை, பிப். 16 –

தமிழ்நாட்டில் கடந்த ஜனவரி மாதம் மூளைச்சாவு அடைந்த 33 பேரின் உடலுறுப்புகள் தானமாக பெறப்பட்டுள்ளன. தேசிய அளவில் இது புதிய சாதனையாகும்.

கடந்த 2008ஆம் செப்டம்பர் 5ஆம் தேதி மூளைச்சாவு உறுப்பு மாற்று சிகிச்சை திட்டத்தை அன்றைய முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் தொடங்கி வைத்தார். மூளைச்சாவு அடைந்து உடலுறுப்பு தானம் செய்பவர்களுக்கு அரசு சார்பில் மரியாதை செலுத்தப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 2023ம் ஆண்டு அறிவித்தார்.

இந்தியாவில் உடலுறுப்பு தானத்தில் தொடர்ந்து தமிழ்நாடு, முதலிடம் வகித்து வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் இதுவரை 8 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மறுவாழ்வு பெற்றுள்ளனர். இந்நிலையில், தமிழ்நாட்டில் கடந்த ஜனவரி மாதம் மூளைச்சாவு அடைந்த 33 பேரின் உடலுறுப்புகள் தானமாக பெறப்பட்டுள்ளன. 33 தானங்களில் 19 அரசு மருத்துவமனைகளில் நடைபெற்றுள்ளன.

இவ்வாண்டு பிப்ரவரி 12 வரை 43 நாட்களில் 42 உறுப்பு தானங்கள் நடைபெற்றுள்ளன. தேசிய அளவில் இது ஒரு புதிய சாதனையாக கருதப்படுகிறது.

---

## தமிழகத்தில் பிப்.23இல் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு!

சென்னை, பிப். 16 –

தமிழ்நாட்டில் இறுதி வாக்காளர் பட்டியல் வரும் 23ஆம் தேதி வெளியிடப்படும் என்று தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்திய உச்ச நீதிமன்றத்தால் WP(C) எண் 1072/ 2025 மற்றும் 1145/ 2025 ஆகிய வழக்குகளில் 29.01.2026 அன்று வழங்கப்பட்ட உத்தரவுகளின் அடிப்படையில், இந்தியத் தேர்தல் ஆணையமானது, 30.1.2026 அன்று வெளியிட்ட கடித எண் 23/ SIR/ 2026/ ERS ல், முரண்பாடுகள் (Logical Discrepancies) என்ற பிரிவில் இடம்பெற்றுள்ள நபர்களின் பெயர் பட்டியலை கிராமப் பஞ்சாயத்து அலுவலகங்கள், பொது இடங்கள் மற்றும் தாலுக்கா/ துணை பிரிவு அலுவலகங்கள், நகரப் பகுதிகளில் உள்ள வார்டு அலுவலகங்கள் உள்ளிட்ட இடங்களில் வெளியிட வேண்டும் என்று அறிவுறுத்தியது.

தற்போது, 01.01.2026ஆம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் சிறப்பு தீவிர திருத்தம் (Special Intensive Revision SIR) தொடர்பான இறுதி வாக்காளர் பட்டியல் 23.02.2026 அன்று வெளியிடப்படும்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக தமிழகத்தில் இறுதி வாக்காளர் பட்டியல் வரும் 17ஆம் தேதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில் தற்போது பிப்.23ஆம் தேதிக்கு தள்ளிப்போய் உள்ளது.

---

## ராஜீவ்காந்தி சாலை – சர்தார் படேல் சாலையை இணைக்கும்

# மத்திய கைலாஷ் சந்திப்பில் ரூ.60.68 கோடியில் ‘ட’ வடிவ மேம்பாலம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, பிப்.16-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.2.2026) நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் சென்னை - அடையாறில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 60 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவில் ராஜீவ் காந்தி சாலை மற்றும் சர்தார் பட்டேல் சாலையை இணைக்கும் மத்திய கைலாஷ் சந்திப்பில் கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தை திறந்து வைத்தார்.**

### மத்திய கைலாஷ் பகுதியில் போக்குவரத்து நெரிசலை களைந்திட புதிய மேம்பாலம் அமைக்கும் பணி!

ராஜீவ் காந்தி சாலையானது மத்திய கைலாஷ் பகுதியில் சர்தார் பட்டேல் சாலையிலிருந்து தொடங்குகிறது. இந்த இரண்டு சாலைகளும் சந்திக்கும் இடம் “L” வடிவிலானதாகும். இச்சாலை சந்திப்பில், அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள் தொடங்கும் நேரத்திலும் முடிவுறும் நேரத்திலும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, பொதுமக்கள் மிகுந்த சிரமத்துடனும், காலவிரயத்துடனும் இச்சாலையை கடந்து செல்ல வேண்டிய நிலை உள்ளது.

### ராஜீவ் காந்தி சாலை மற்றும் சர்தார் பட்டேல் சாலையை இணைக்கும் மத்திய கைலாஷ் சந்திப்பில் கட்டப்பட்டுள்ள புதிய மேம்பாலத்தின் சிறப்பம்சங்கள்!

மத்திய கைலாஷ் சந்திப்பில் வாகனங்கள் சிரமமின்றி கடந்து செல்வதற்கு வாகன செறிவுகளின் அடிப்படையில் சர்தார் பட்டேல் சாலையிலிருந்து ராஜீவ் காந்தி சாலைக்கு செல்லும் வாகனங்கள் அனைத்தும் தற்போது அமைக்கப்பட்டுள்ள இருதட ஒருவழிச்சாலை மேம்பாலத்தினை பயன்படுத்தும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு, கிண்டியிலிருந்து ராஜீவ் காந்தி சாலைக்கு (OMR) செல்லும் வாகனங்கள் அனைத்தும் இப்பாலத்தினை பயன்படுத்தும்போது அடையாறு பகுதியிலிருந்து கிண்டி நோக்கி செல்லும் அனைத்து வாகனங்களும் எவ்வித தங்குதடையின்றி செல்ல வழி ஏற்படும். மத்திய கைலாஷ் சந்திப்பில் அமைக்கப்பட்டுள்ள போக்குவரத்து சமிக்ஞையும் விலக்கிக் கொள்ளப்படும். மேலும், கிண்டியிலிருந்து அடையாறுக்கும், OMR சாலையிலிருந்து கிண்டிக்கும் செல்லும் வாகனங்கள் இலகுவாக இடதுபுறப் பயணம் (Free left movement) மேற்கொள்ள இயலும்.

இந்த “L” வடிவ இருதட ஒருவழிச்சாலை மேம்பாலம் 60 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவில், இருவழித்தடம் அகலம் கொண்டதாகவும், ஒருவழி வாகன போக்கு வரத்து கொண்டதாகவும்,


தொடர்ச்சி 3ஆம் பக்கம்




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.2.2026) நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் சென்னை அடையாறில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 60 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவில் ராஜீவ் காந்தி சாலை மற்றும் சர்தார் பட்டேல் சாலையை இணைக்கும் மத்திய கைலாஷ் சந்திப்பில் கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தை திறந்து வைத்தார்.